[18th September 1961

SRI K. R. VISWANATHAN : May I know when the additional trustee was appointed for the Soleeswarar temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information. All these appointments are made by the Area Committee.

SRI K. R. VISWANATHAN : May I know whether Government have received complaints against this trustee with regard to irregularities and his reprehensive behaviour against the temple Inspector when the temple Inspector wanted to visit and inspect the temple? May I know whether if the Area Committee is helpless and incapable of dealing with the trustee, Government could not interfere and take proper action to deal with the trustee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government's interference or action that could be taken, could arise only according to the prescribed procedure found in the provisions of the Act.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I do not find any lady's name in the list of trustees. Will the Government appoint at least one lady as a trustee for each temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such idea. Where suitable ladies are available for appointment as trustees, that is being very favourably considered. It is not as if all ladies are available for appointment as trustees.

Uniforms for Health Inspectors

* 1599 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் கட்டாயமாக உடை அணிய வேண்டுமென்று விதிகள் உண்டா?

(இ) உடைகளுக்காக எவ்வளவு பணம் தரப்படுகிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : (Yes, Sir.

(இ) No allowance is paid.

SRI S. M. ANNAMALAI : அவர்கள் கட்டாயம் உடை அணியவேண்டுமென்றால், அவர்களுக்கு உடை அலவன்ஸ் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த உத்திரவு 1923-ம் வருஷத்திலே போடப்பட்டது. உடை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்ற ஸ்கீம் கொண்டுவந்தும் அது வெற்றியடையவில்லை. மறுபடியும் கொண்டுவர வேண்டுமென்றால் இப்பொழுது அவர்களுக்கு சம்பளம் கொஞ்சம் அதிகமாகப் போய்விட்டது. அவர்களுக்கு முன்னர் ரூ. 60-ல் இருந்து ரூ. 130 வரை இருந்தது. இப்பொழுது ரூ. 100-ல் இருந்து ரூ. 200 வரை

18th September 1961]

இருக்கிறது, ரூ. 140-ல் இருந்து ரூ. 190 இருந்தது. இப்பொழுது ரூ. 190-ல் இருந்து ரூ. 300 ஆக இருப்பதால் அவர்கள் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கொள்ளவேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு என்ன உடை வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அந்த உடை தேவையில்லை என்று தீர்மானம்போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களா? அப்படியானால் அதை அரசாங்கம் பரிசிலனை செய்ததா?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடை லிஸ்டைப் பார்த்தால் ரொம்பவும் தடபுடலாக இருக்கிறது—

காகி ஓபன் கோட்.

காகி ஷர்ட், 'ஸீ' காலர், டை.

காகி டர்பன்—லேஸ் பார்டர்.

காகி ஸ்டாக்கிங்ஸ்.

ப்ரவுன் பூட்ஸ் முதலியவைகள் இருக்கின்றன.

1923-ம் ஆண்டில் இந்த உத்திரவு போடப்பட்டது.

SRI A. A. RASHEED : ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் கட்டாயமாக உடை அணியவேண்டுமென்ற விதி உண்டா என்று கேள்வியில் இருக்கிறது. அப்படியானால் அவர்களுக்கு உடை கொடுக்காதிருக்க விதிவிலக்கு அளிப்பார்களா? (பதில் இல்லை.)

SRI S. M. ANNAMALAI : 1923-ம் ஆண்டிலே உத்திரவு போடப்பட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1923-ம் ஆண்டில் போட்ட உத்திரவை ஏன் இன்னும் கட்டாயப் படுத்தவேண்டும்? ஏன் அந்த உத்திரவை ரத்து செய்து, அந்த உடையை அணியக்கூடாது என்று உத்திரவு போடக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடை போட்டுக் கொண்டு இன்ஸ்பெக்டர்கள் வேலை செய்தால் கம்பீரமாகவும், மரியாதையாகவும் இருக்கும். ஆனால் அதை எல்லோரும் போடுவதில்லை. சிலர்தான் போடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அலவன்ஸ் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI K. B. S. MANI : முந்திய சம்பள விகிதத்தில் இருந்து தற்போதைய சம்பள விகிதத்தில் சற்று உயர்வு கொடுத்திருப்பதால், அவர்கள் அணியவேண்டிய யூனிபாரம்மை சுலபமான முறையில் மாற்றினால், அவர்களே அதைத் தங்கள் சொந்தத்தில் வாங்கிக்கொள்ள முடியும் அல்லவா? ஆகவே அவர்களுக்கு ட்ரஸ் அலவன்ஸ் என்று கொடுத்து அவர்களே வாங்கிக்கொள்ளக் கூடிய விதத்தில் டை, ஜரிகை டர்பன் போன்று இல்லாமல் சுலபமான முறையில் அதை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா?

[18th September 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை முன்பே சுலபமாக்கியிருக்கிறோம், சிறிது. விதியைத் தளர்த்தி கோட் வேண்டியதில்லை, ஷர்ட் மட்டும் போட்டால் போதும் என்று தளர்த்தியிருக்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : அலவன்ஸ் கொடுப்பது இல்லையா என்று முடிவுக்கு வருவதற்கு முன்னால் இப்படிப்பட்ட உடையைத்தான் அணியவேண்டும் என்று இல்லாமல் அப்படி அணியாமல் அவர்கள் பணி செய்யலாம் என்று செய்வதை பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. நடைமுறையில் நடக்கிற விஷயம் நமக்குத் தெரியும். அதேபடி கொஞ்சம் நடந்து கொண்டிருந்தால் அதற்குள் இது சரியாகிவிடும்.

SRI A. GOVINDASAMY : ஹெல்த் இன்ஸ்பெக்டர் சம்பளம் கூடுதலாக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு உடை அலவன்ஸ் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மற்ற இலாக்காக்களில் சம்பள உயர்வு இருந்தும் யூனிபாரம்ஸ் கொடுப்பது மாதிரி இங்கும் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. தேவை உண்டு என்று சொல்லி பார்ட் 2 ஸ்கீமாகக் கொண்டுவந்தோம். அது ஒத்திப்போடப்பட்டிருக்கிறது. அடுத்ததில் வரும். சம்பளம் கொஞ்சம் சம்பளம் அதிகமாக உயர்ந்திருப்பதால் சிறிது "அட்ஜஸ்ட்மென்ட்" செய்து கொள்ளலாம் என்று நான் சொன்னேன்.

DR. SRIMATHI SOUNDARAM RAMACHANDRAN : அலுவல் உடை என்று சொல்லலாம். இல்லாமல் உடை அணியவேண்டுமென்று சொல்வதே கஷ்டமாகயிருக்கிறது. (பதில் இல்லை.)

SRI K. VINAYAKAM : Sir, were any instances brought to the notice of the Government where such of those Health Inspectors that did not conform to the dress regulations were taken to task, or was any disciplinary action taken against them by the department concerned?

THE HON. SRI M. A. MANICKAVELU : No such instances have been brought to my notice.

DEPUTY SPEAKER : Questions 1600 and 1601 are postponed.

Road Development Works (Foreign Aid)

* 1602 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have received any aid for road development works from the aid received from the U.S.A. by the Union Government?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.